Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# திருகலான பின்நவீனத்துவ நாடகங்களின் கோணல்மாணல்கள்

**முனைவர் இரவி,**
**தமிழ்த்துறைத் தலைவர், அறிவியல் மற்றும் கலையியல் புலம்,**
**எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,**
**வடபழனி வளாகம், சென்னை-26.**

**ஆய்வுச்சுருக்கம்:**

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை- தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பள் இங்குவாரா திடர்.

என்கிற சரஸ்வதி அந்தாதி செய்யுளில் கம்பநாட்டாழ்வான் ஆயக்கலைகள் அறுபத்து நான்கு என்று குறிப்பிடப்படுகிறான். அந்தவகையில், கவிதை, புதினம், சிறுகதை ஆகிய பிரதிகளிலும் பின்நவீனத்துவம் உள்ளடக்க ரீதியிலான மாற்றங்களுக்குக் காரணமாகியுள்ளது. அதேபோல, ஓவியக்கலை, கட்டடக்கலை ஆகியவற்றிலும் பெருந்தாக்கங்களை உருவாக்கியுள்ளது. இவ்வாறு கலை, இலக்கியம், அரசியல், மதம் எனச் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பல்வேறு மாற்றங்களுக்குப் பின்நவீனத்துவம் வழிவகுத்துள்ளது. இப்படி எல்லாவற்றையும் கலைத்துப்போட்டுக் கலகம் விளைவித்த பின்நவீனத்துவம் நாடகக்கலையையும் விட்டு வைக்கவில்லை. நாடகத்தின் எல்லா அடிப்படை விதிகளையும் மறுகட்டுமானம் செய்து பார்வையாளனுக்கு மாபெரும் அதிர்ச்சி அனுபவங்களைத் தந்தது. அதனை விவரித்துச் சொல்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** பின்நவீனத்துவம் – நாடகம் – சிதறல் – சிறுகதையாடல் – கட்டுடைப்பு – சிதைவு – பன்மைத்துவம் – அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துதல் –விளிம்புநிலை - தொடர்ச்சியின்மை – நவீனத்துவம்.

**முகப்புரை:**

இயல், இசை, நாடகம் என்ற முப்பகுப்பில் நாடகம் என்பது வெகுசன மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற கலை வடிவமென உறுதிபடக் கூறலாம். மனித வாழ்வின் வாழ்வியல் சம்பவக் கூறுகளை உள்ளடக்கியதாகவே நாடகம் அமைகின்றது. நம் அன்றாட வாழ்வில் நடக்கின்ற நிகழ்வுகளின் பிரதிபலிப்பாகவே நாடகக்காட்சிகளின் தொகுப்பு காணப்படும். நாடகக் கலையில் காலந்தோறும் உள்ளடக்க ரீதியாகவும், உத்திகள் ரீதியாகவும் பல்வேறு மாற்றங்கள் தோன்றியிருக்கின்றன. இத்தகைய மக்கள் கலையான நாடகத்தில் பின்நவீனத்துவம் ஏற்படுத்தியிருக்கின்ற பிரளயங்களே இவ்வாய்வின் தளமாகும்.

**பின்நவீனத்துவத்தின் வரவும் விளைவும்:**

பின்நவீனத்துவம் என்பதைப் புதுமையான ஒரு சிந்தனைப் போக்காக நாம் புரிந்து கொள்ளலாம். 19 ஆம் நூற்றாண்டில் நவீனத்துவம் என்கிற ஒரு சொல்லாக்கம் எழுச்சி பெற்றது. இந்தக் காலகட்டத்தில்தான் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மாபெரும் ஒரு வளர்ச்சி நிலையை நோக்கி மனித குலம் நகர்ந்தது. அந்த நகர்வுக்கு மிகப்பெரிய துணையாக இருந்தது அறிவியலும் அறிவியல் சார்ந்த ஆராய்ச்சிகளுமே ஆகும்.

அந்த அறிவியலின் மூலமாகச் சிந்திக்கப்பட்ட சிந்தனைகளின் விளைவாக ஐரோப்பா கண்டம் முழுவதும் தொழிற்சாலைகளும் தொழில் வளர்ச்சியும் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு எழுச்சியோடு வளர்ச்சி பெற்றது. இந்த அறிவியலின் அசுர வளர்ச்சியின் காரணமாக மனிதன் இயற்கையோடு தனக்கு இருந்த பிணைப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக விடுவித்துக் கொண்டே வந்தான். இயற்கைக்கு அப்பாற்பட்டு நாம் கண்டுபிடித்து வைத்திருக்கின்ற அறிவியலே அனைத்துக்கும் தீர்வைக் கொடுக்கும் என்று மனிதன் நம்பத் தொடங்கினான். இந்த அறிவியல் தொழிற்புரட்சிக்கு அடுத்து, தகவல் தொழில்நுட்பப் புரட்சியும் உருவானதும் உலகம் உள்ளங்கைக்குள் வந்தது போல் ஒரு மாயையான சூழல் ஏற்பட்டது. இன்றைக்கு உலகம் உள்ளங்கைக்குள் வந்து விட்டதாக மனிதன் கருதிக் கொண்டு இருந்தாலும், ஒரே வீட்டுக்குள் மனிதன் கைப்பேசிகளை வைத்துக்கொண்டு தனித்தனித் தீவுகளாகித் தனிமைப்பட்டுப் போய் அவதிப்பட்டு கொண்டிருக்கிறான் என்பதையும் இந்தத் தருணத்தில் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

உலகம் தோன்றிய நாளிலிருந்து பற்பலவாகச் சிதறிக் கிடந்த சிந்தனையோட்டங்கள் அறிவியலின் எழுச்சி காரணமாக அறிவியலை மையமாகக் கொண்ட ஒரு சிந்தனையோட்டமாகச் சுருங்கலாயிற்று. அதற்கடுத்து அந்தந்தப் பிராந்தியங்களுக்கு ஏற்ப இருந்த சிந்தனைக் கட்டுமானங்கள் தகர்க்கப்பட்டு உலகின் எந்த மூலையில் ஒரு சிந்தனைப்போக்கு உருவாகினாலும் அது உலகம் முழுமைக்குமான சிந்தனைப்போக்காகப் பொதுமைப்படுத்தக்கூடிய ஒரு சூழல் உருவானது. இவ்வாறு நவீனத்துவம் தனித்துவங்களைத் தகர்த்தெறிந்துவிட்டு புதுமைத்துவங்களைப் புகுத்த முயற்சி செய்து கொண்டிருந்தது.

நவீனத்துவ காலகட்டம் கோலோச்சிய சூழலில் சிந்தனை முறையிலும் சமூகக் கட்டமைப்புகளிலும் பண்பாட்டியல் சார்ந்தும் பல்வேறு மாற்றங்களும் தடுமாற்றங்களும் நிகழ்ந்த வண்ணமாய் இருந்தன. இம்மாதிரியான சூழலை நவீனத்துவ காலகட்டமாக நாம் அறுதியிட்டுப் புரிந்து கொள்ளலாம்.

இந்த நவீனத்துவ காலகட்டத்தில் மனிதன் ஒன்றை மட்டுமே சார்ந்து இருக்கக்கூடிய ஒற்றை மையம் என்கிற புள்ளியை உருவாக்கினான். இந்த மையம் தனித்துவங்கள் என்று சொல்லக்கூடிய மற்றமைகளை நிர்மூலமாக்கின. இப்படியாக நவீனத்துவக் காலகட்டத்தில் கண்ணுக்குத் தெரியாத சில அழித்தொழிப்புகளும் நிகழ்ந்தேறிக் கொண்டிருந்தன. நவீனத்துவம் உருவாக்கிய அமைப்புகளாகச் சிலவற்றை நாம் குறிப்பிடலாம்.

நவீனத்துவம் ''மதமெனும் பெருங்கதையாடல், அரசாங்கங்கள், தொழிற்சாலைகள், கல்விக்கழகங்கள், புவிப்பரப்பெங்கும் பயணித்துவர உதவும் போக்குவரத்து, எல்லோருக்குமான செய்தித் தொடர்பு ஊடகங்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்தது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஓருலகம், ஒரு வாழ்க்கை முறை என்ற மையத்தை நவீனத்துவம் கட்டியெழுப்பியது. அசுர பலத்தோடு கட்டியெழுப்பப்பட்ட மையங்கள் விளிம்புநிலையையும், சிறியவைகளையும் தகர்த்துத் தரைமட்டமாக்கின.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான காலகட்டத்தில் ஏற்பட்ட பேரழிவுகளின் காரணமாக மனிதன் ஒரு நிராதரவு நிலையில் நின்று கொண்டிருந்தான். அதுவும் ஐரோப்பா கண்டம் முழுவதும் இந்த நிலையே காணப்பட்டது. பல்வேறு உலக நாடுகள் முழுவதும் மனித குலத்துக்கு நடுவே ஒரு நிச்சயமின்மை ஊடாடிக் கொண்டே இருந்தது. அந்த நிச்சயமின்மை மனிதனின் இருப்பை ஆட்டிப் படைத்துக் கொண்டே இருந்தது. நவீனத்துவம் தமக்குள் விதைத்திருந்த அனைத்து நம்பிக்கைகளும் தன்னைத் தவிக்க விட்டுவிட்டுப் போய்விட்டதாக அந்த இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான சூழ்நிலை அவனுக்கு உணர்த்திக் கொண்டே இருந்தது. அதுவரை அன்றைய மனிதன் கடைபிடித்து வந்த எல்லா ஒழுங்குகளும் அவனுக்குள்ளேயே அவனை அன்னியமாக்கி

நிராதரவு நிலையில் அவனைக் கைவிட்டு விட்டதாக அவன் உணர்ந்தான்.

அதுவரை இலட்சிய வாதம், நேர்மை, ஒழுங்கு என்று பேசிக் கொண்டிருந்த மனிதன் அதன் மீது நம்பிக்கையை இழந்து அதைத் தாண்டிய ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கும்போது பிறந்தது தான் இந்தப் பின்நவீனத்துவம் என்கிற ஒரு கோட்பாடாகும். இந்தக் கோட்பாடு மற்ற கோட்பாடுகளைப் போல் புதிய தீர்வு எதனையும் தன்னிடத்தில் வைத்துக் கொண்டிருக்கவில்லை. மனிதனைக் காப்பாற்றுகிறேன்; மனிதனுக்கு வழிகாட்டுகிறேன் என்ற போர்வையில் புதிய தீர்வுகள் எதனையும் சொல்ல எத்தனிக்கவில்லை. ஏற்கனவே, கட்டமைக்கப்பட்டிருக்கின்ற அதனை விட்டு விலகினாலே; அதைக் கட்டுடைத்தாலே ஒரு தெளிவுகள் கிடைத்து விடும். அவனை அழுத்திக் கொண்டிருக்கின்ற அனைத்துக்கும் ஒரே தீர்வு ஏற்கனவே கட்டமைக்கிருக்கின்ற கட்டுக்களைக் கட்டவிழ்ப்பதே என்கிற ஒரு புதிய சித்தாந்த போக்கைப் பின்நவீனத்துவம் முன்வைத்தது.

எதனையும் கட்டுடைப்புச் செய்வதே பின்நவீனத்துவம் என்று நாம் புரிந்து கொள்ளலாம். அந்த வகையில் நாடகம் என்கிற கலையிலும் அதுவரை பின்பற்றி வந்து கொண்டிருந்த பல்வேறு முறைகளை மாற்றியமைத்துத் தலைகீழான முற்றிலும் புதியதோர் நாடக முறையை இந்த உலகிற்குப் பின்நவீனத்துவம் அளித்தது.

**பின்நவீனத்துவ நாடகத்தின் சலனக்கூறுகள்**:

பின்நவீனத்துவம் என்பது அறுபதுகளில் தொடங்கப்பட்ட ஒரு இயக்கம் ஆகும். ஓர் அதிர்ச்சிகரமான கலை இலக்கியக் கோட்பாடாக உருவான பின்நவீனத்துவம் அந்தக் காலகட்டத்தில் தோன்றிய கலை மற்றும் இலக்கியத்தின் போக்குகளைக் கலைத்துப் போட்டு அனைத்து நிலைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் தாக்கம் பரவலாகவும் தவிர்க்க முடியாததாகவும் இருந்தது. அந்தவகையில் நாடக அரங்கிலும் பின்நவீனத்துவ இயக்கத்தின் தாக்கங்கள் மிகுந்திருந்தன.

பின்நவீனத்துவம் நவீனத்துவத்திற்குப் பிறகு எல்லாவற்றையும் எரித்துக் கொண்டு ஜனித்த கோட்பாடாகும். அது நவீனத்துவ நாடகத்தின் கருத்துக்கள் மற்றும் மதிப்பீடுகளுக்குச் சவால் விடுவதாக இருக்க முயன்றது. நவீனத்துவம் உலக நடப்புகளை காட்சிகளாக்கி விளக்க, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் புதிய கோட்பாடுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரங்கத்தை அதிர்வுறச் செய்ய முடியும் என்று நம்பியது. தொழில்நுட்பம் என்பதை அறிவியலின் மாயை எனப் பின்நவீனத்துவம் எடுத்தியம்புகிறது.

அதுமட்டுமல்லாமல், பின்நவீனத்துவ நாடகம் பார்வையாளர்களுக்குப் பதில்களை தர முயல்வதைவிட அதிகமான கேள்விகளையே எழுப்ப முயல்கிறது. நவீனத்துவ இயக்கம் "பிரமாண்ட கதை" என்ற பெருந்தோற்றத்தை உருவாக்கியது. பின்நவீனத்துவ நாடகத்தில் ஒரே ஒரு சாத்தியமான விளக்கம் மட்டுமே பார்வையாளர்களுக்குப் பரிமாறப்படுகிறது. சாதாரணங்களைக் கலையின் பொருண்மைகளாகத் தந்து செல்கிறது.

பின்நவீனத்துவ நாடகத்தில் கதை தொடர்ச்சியாகவோ முழுமை பெற்றதாகவோ இருக்காது. அதேபோல, யதார்த்தமற்றதாகவும், உடைந்த தன்மை கொண்டதாகவும், முரண்பாடுகளை உள்ளடக்கியதாகவும் , நம்பகமற்ற கற்பனைக் கூறுகளைக் கொண்டதாகவும் பின்நவீனத்துவ நாடகங்கள் இருக்கும்.

பின்நவீனத்துவ நாடகக்கதைகள் அறம் போதிப்பதாகவும், நீதி வென்றதாகவும் எதனையும் முன் வைக்காது. முடிவுகள், தீர்வுகள் போன்ற எவ்விதமான இறுதிக் கட்டுமானங்களையும் பார்வையாளனுக்குக் கிடைத்திட வகை செய்யாது. அதேபோல, இதுதான் சரியானது; இது தவறானது

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

என்பது போன்ற அறுதியிட்ட கருத்தியலையும் பின்நவீனத்துவ நாடகங்கள் தந்து செல்வதில்லை.

நவீனத்துவ நாடகங்களைப் போல் நேர்கோட்டுத்தன்மையில் செல்லாமல் அதிலிருந்து நழுவிப் பன்முகத்தன்மைக்கு இட்டுச் செல்வதாக இருக்கும். ஒற்றைக் கதையாக இல்லாமல் இரண்டு மூன்று கதைகளைக் கொண்டிருக்கும். மேலும், இரண்டு மூன்றாக இருக்கின்ற கதைகள் எந்தச் சூழலிலும் முழுமையை அடையாமலே ஒருவித அத்துவான நிலையிலேயே நாடகம் நிறைவு பெறும். ஒரு கதாபாத்திரம் இப்படித்தான் பேச வேண்டும். முதல் காட்சிக்கும் அடுத்த காட்சிக்கும் தொடர்பிருக்க வேண்டும் என்ற தருக்கங்களையெல்லாம் பின்நவீனத்துவம் பொருட்படுத்துவதில்லை.

நாடகத்துக்குள் இடம்பெற்றிருக்கின்ற காட்சியமைப்புகள் துண்டு துண்டாக தொடர்ச்சியின்மைகளை கொண்டியங்கும். மையத்தன்மையானது முற்றிலுமாகச் சிதைக்கப்பட்டிருக்கும். அந்தக் கதையின் கருவும் கதைப்போக்கும் நாடக வரையறைக்குள் கட்டுப்படாத தன்மையையே கொண்டிருக்கும். அதாவது, முற்றிலும் மாறுபட்ட தொடர்ச்சியற்ற துண்டுகளின் தொகுப்பாகவே காணப்படும்.

பின்நவீனத்துவ நாடகக் காட்சிகளில் புதிய நடிப்பு என்ற பெயரில் ஒத்திசைவு இல்லாத நிலையில் பல்வேறு சிதறல்களைக் காண முடியும். ஆகையால், பார்வையாளனால் எந்த வட்டத்துக்குள்ளும் அதனை வைத்துப் புரிந்துகொள்ள முடியாது. ஒரு கொலாஜ் ஓவியத்தைப் பார்த்த அனுபவத்தையே பார்வையாளன் பெற முடியும். ஒரு தனித்துவமான காட்சியையோ, ஒரே நாடகக் கதையையோ திரும்பத் திரும்பச் அரங்கேற்றும் நோக்கமும் பின்நவீனத்துவக் கலைஞர்களிடம் இருக்காது.

**பின்நவீனத்துவத் தன்மை கொண்ட சில பிரபலமான நாடகங்கள்:**

1. சாமுவேல் பெக்கெட்டின் "Waiting for Godot"
2. Harold Pinter இன் "The Homecoming"
3. Tom Stoppard இன் "Rosencrantz and Guildenstern Are Dead"
4. Tony Kushner இன் "Angels in America"
5. Caryl Churchills's Keep "Top Girls"

மேற்குறிப்பிட்டுள்ளவை பின்நவீனத்துவத்தின் கோட்பாட்டுப் பின்புலங்களைக் கொண்ட ஒரு சில நாடகச் சான்றுகளாகும். இவை மட்டுமல்லாமல் பின்நவீனத்துவத் தன்மை கொண்ட நாடகங்கள் பல உள்ளன. அதற்கடுத்து, பின்நவீனத்துவம் என்பது ஒரு சிக்கல் நிறைந்ததும் பன்முகத் தன்மைகளை ஊக்கப்படுத்துவதுமான ஒரு கலக இயக்கமாகும்.

பின்நவீனத்துவத்தில் எண்ணற்ற கூறுகளும் தன்மைகளும் காணப்படுகின்றன. இத்தகைய அனைத்துக் கூறுகளையும் ஒரே நாடகத்தில் காண முடியாது. வெவ்வேறு நாடகங்களின் போக்குகளின் வழியே பின்நவீனத்துவக் கூறுகள் அங்கங்கே இடம்பெற்றிருப்பதை அறிந்துகொள்ள முடியும்.

**தமிழில் பின்நவீனத்துவ நாடகங்கள்:**

தமிழ் நாடகத்துறையில் பின்நவீனத்துவம் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.. ஒரு கலாச்சார மற்றும் தத்துவ இயக்கமாக இருந்த பின்நவீனத்துவம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் நாடகத்தின் போக்கில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது. அது கதைசொல்லல், பாத்திர மேம்பாடு மற்றும் பார்வையாளர்களின் ஈடுபாடு என இருந்த பழைய விதிமுறைகளை முற்றிலுமாக மாற்றிப் புதிய கோணத்தில் நாடகத்தைக் காணும் தன்மையைக்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கொடுத்தது.

தமிழ் நாடக ஆசிரியர்களான எஸ்.முருகபூபதி, எஸ்.ராமநாதன் போன்ற நாடக நடத்துநர்களால் ஈர்க்கப்பட்ட நா. முத்துசாமி பின்நவீனத்துவ நுட்பங்களை ஆராய்ந்து, புதுமையான பரிசோதனை முறையிலான படைப்புகளை உருவாக்கினார். இதில், அபத்தம், துண்டு துண்டாக மற்றும் மெட்டா-தியேட்டரிகலிட்டி போன்ற கூறுகளை உள்ளடக்கிய வழக்கத்திலிருந்த பாரம்பரிய விவரிப்புகளைத் தகர்த்தனர்.

அவர்களின் நாடகங்கள் பெரும்பாலும் யதார்த்த தன்மை, அடையாளம் ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்கி, நவீன தமிழ்ச் சமூகத்தின் சிக்கல்களைப் பிரதிபலிப்பதாக இருந்தன. இந்த இயக்கம் தமிழ் நாடகத்திற்குப் புத்துயிர் அளித்தது. புதிய பார்வையாளர்களை ஈர்த்தது. பின்நவீனத்துவம் நாடகக் கலைவடிவத்தில் புதிய கண்ணோட்டங்கள் உருவாக வழிவகை செய்து தந்தது.

**முடிவுரை:**

நவீனத்துவ நாடகக் கலை எடுத்துரைத்த பாங்குக்கு நேரெதிரான தன்மைகளையே பின்நவீனத்துவ நாடகக்கலை கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கலையியலில் நிலவிவந்த பன்மைக்கூறுகளை அடித்து நிரவி நவீனத்துவம் ஒற்றைத்தன்மை என்பதை முன்னிறுத்தியது. உலகம் முழுவதும் இயற்கையோடு இயைந்து உருவாக்கப்பட்ட கலைப்புதையல்களையெல்லாம் காலாவதியாக்கி விட்டு சாமான்யன் நிகழ்த்திக் காட்ட முடியாத கலை சர்வாதிகாரத்தை நவீனத்துவம் முன்வைத்தது.

நாடகக்களத்தை அதகளமாக்கிய பெருமை பின்நவீனத்துவத்தையே சாரும். எப்படியென்றால், நவீனத்துவ நாடகத்துக்கு மிகச் சரியான நேரெதிரான எதிர்வினையைப் பின்நவீனத்துவ நாடகங்களே நிகழ்த்திக் காட்டியது.

நவீனத்துவ நாடகக்கலை வடிவத்துக்குச் சரியான பதிலடியாகவும், கருத்தியல் போட்டியாகவும், எதேச்சதிகார தோரணையோடு ஊடாடிய நவீன கலைப்போக்குக்குக் கடிவாளம் பூட்டிய ஒரு சிந்தனை வரவாகப் பின்நவீனத்துவ நாடக வரவைப் புரிந்து கொள்ளலாம்.

**உதவிய நூல்கள் :**

1. க.பூரணச்சந்திரன்(மொ.ஆ.),பின்நவீனத்துவம் தொடக்கநிலையினருக்கு, 2014,
அடையாளம், புத்தாநத்தம்-621310.

**இணைய தளங்கள்:**

2. https://www.studocu.com/in/document/jawaharlal-nehru-university/modern-literary-theories/influences-of-postmodernism-movement-in-theatre-performance/29681668

**தொழில்நுட்பம்:**

3. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்.